அரசு கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச வங்கிகள் மற்றும் முழு அரசுடைமை கம்கனிகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்காக அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துதல்

அரசகரும மொழிகள் திணைக்களம்
அரசகரும மொழித் தேர்ச்சி வாய்மொழி மூலப் பரீட்சை
சிங்களம் / தமிழ் மட்டம் I / II / III / IV

அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக, 2023.01.19 ஆந் திகதி வெளியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 1/2023 இன் பந்தி 8.1 இன் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 4/2014 இலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய அரச கூட்டுதாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச வங்கிகள் மற்றும் முழு அரசுடைமை கம்பனிகளின் உத்தியோகத்தர்களுக்காக அரசகரும மொழிக் கொள்கையை அமுல்செய்தல் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துவதுடன் தொடர்புடைதாக தமது மற்றைய அரசகரும மொழியில் தேர்ச்சியை பூர்த்தி செய்வதற்கு பின்வரும் எழுத்துத் தகைமைகளில் ஒன்றைப் பூர்த்தி செய்யதுள்ள உத்தியோகத்தர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சந்தர்ப்பமொன்றை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

I. அரசகரும மொழித் தேர்ச்சி எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைதல் அல்லது
II. க.பொ.த.(சா.தரம்) பரீட்சையில் சிங்களம் / தமிழ் மொழி மற்றும் இலக்கிய பாடத்தில் சித்தியடைதல் அல்லது
III. க.பொ.த. (சா.தரம்) பரீட்சையில் சிங்களம் / தமிழ் இரண்டாம் மொழியில் சித்தியடைதல்

02. அதற்கமைய, தற்சமயம் உரிய எழுத்து மூலத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களுக்காக அரசகரும மொழித் தேர்ச்சி வாய்மொழிமூலப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

03. இது தொடர்பான மாதிரி விண்ணப்பப்படிவம் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் www.languagesdept.gov.lk இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விண்ணப்பங்கள் தொடரறா (online) முறையில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்கள் ஆங்கில மொழியில் மட்டுமே சமர்ப்பிக்கப்பட வேண்டும். விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி 2023.05.30 ஆகும்.

04. பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு உத்தியோகத்தரும் தாம் தோற்றும் மட்டத்திற்கு ஏற்ப கீழ்க்கண்டவாறு பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| மட்டம் I | - | ரூ. | 1000.00 |
| மட்டம் II | - | ரூ. | 700.00 |
| மட்டம் III | - | ரூ. | 500.00 |
| மட்டம் IV | - | ரூ. | 300.00 |

பரீட்சை கட்டணம், தீவில் உள்ள எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலிருந்தும் ராஜகிரிய இலங்கை வங்கி அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தின் கணக்கு இலக்கம் 7041541 இற்கு வரவு வைக்கப்பட வேண்டும். அத்துடன் அப்படிவத்தில் வைப்புச் செய்பவரின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்பட வேண்டிய இடத்தில், பெயர் மற்றும் முகவரிக்கு மேலதிகமாக, பரீட்சைக்கு விண்ணப்பிப்பவரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்துடன் வாய்மொழி மூலப் பரீட்சை - 2023 என்பதையும் குறிப்பிடுதல் வேண்டும். மேலும்,

கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை பரீட்சையின் போது சமர்ப்பிப்பதற்காக உங்களிடம் வைத்திருக்க வேண்டும்.

05. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

1. மாவட்டம் - சுகாதார காரணங்களின் அடிப்படையில், கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையைப் பொருத்து, இந்த வாய்மொழி மூலப் பரீட்சையை மாகாண மட்டத்தில் நடாத்துவதற்கு இடமுண்டு. எனவே உங்களது அலுவலக முகவரிக்குரிய மாவட்டத்தை உரிய கூண்டில் குறிப்பிடவும்.
2. பரீட்சைக்காக பூர்த்தி செய்துள்ள எழுத்துத் தகைமைகள், வாய்மொழி மூலப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழி மூலமும் மட்டமும் முதலான விபரங்களை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும், என்பதுடன் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எக்காரணம் கொண்டும் பின்னர் மாற்றப்பட மாட்டாது.
3. விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யும் போது ஆங்கில பெரிய எழுத்துகளில் பூர்த்தி செய்தல் வேண்டும்.
4. விண்ணப்பத்தில் உள்ள தொலைபேசி இலக்கம் – இப் பரீட்சை தொடர்பான ஒருசில தகவல்கள் தொலைபேசி குறுஞ்செய்தி மூலம் தெரிவிக்கப்படலாம் என்பதால், உங்களை எளிதாக தொடர்பு கொள்ளக்கூடிய கையடைக்கத் தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.
5. அரசகரும மொழித் தேர்வில் வாய்மொழி மூலப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக பூர்த்தி செய்துள்ள எழுத்துத் தகைமை தொடர்பான தகவல்களை விண்ணபத்தில் குறிப்பிடுதல் வேண்டும். மேற்படி தகவல்களுடன் தொடர்புடைய பெறுபேற்றுத் தாளின் நகல் பிரதியொன்றை, நிறுவனத் தலைவரினால் அல்லது அவரால் அதிகரமளிக்கப்பட்ட பிற உத்தியோகத்தரொருவரினால் அத்தாச்சிப்டுத்தப்பட்டு பரீட்சைக்குத் தோற்றும் போது சமர்ப்பித்தல் வேண்டும்.
6. வாய்மொழி மூலப் பரீட்சைக்குத் தோற்றும் போது பரீட்சைக்குரிய கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

06 மேற்கூறிய அறிவுறுத்தல்களுக்கும் மாதிரி விண்ணபப்படிவத்திற்கும் இணங்காத விண்ணப்பங்கள், முழுமையடையாத அல்லது கடைசித் தேதிக்குப் பிறகு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எந்தவித அறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின்படி நடாத்தப்படும் கடைசி வாய்மொழி மூலப் பரீட்சை இதுவாகும் என்பதால், இனிமேல் வாய்மொழி மூலப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் எவ்வித முன்னறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும்.

07. இப்பரீட்சை தொடர்பான சகல விடயங்கள் தொடர்பாகவும் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்திற்கு உரியது.

08.சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஊடகங்களில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தல்களுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை காணப்படின், சிங்கள மொழிமூல அறிவித்தல் மேலோங்கி நிற்கும்.

.

பிரின்ஸ் சேனாதீர
அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகம்
அரசகரும மொழிகள் திணைக்களம்
இல. 341/7
கோட்டே வீதி
இராஜகிரிய
202310.02.